DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedute)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

CASE NO. : C.C. 13/2021

DEPOSITION OF WITNESS FOR : PW 1

NAME : Syed Sulaiman

FATHER/HUSBAND NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

TIME :

( A1 to A2 absent. Petition U/s. 317 of Cr.P.C. filed and allowed. )
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.06.2023

முதல் விசாரணை

நான் மேட்டுப்பாளையத்தில் குடியிருந்து குறுமிளகு மற்றும் டீ தூள் வியாபாரம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும்.

1. 10.11.2016 ம் தேதி கோவை மாவட்டம் வீரபாண்டி காமராஜர் தெருவிலுள்ள சண்முகம் அவர்களுடைய கிருஷ்ணவேணியிடம் 6.66 விஸ்தீரமுள்ள நிலத்தை விலைக்கு வாங்கி இருந்தேன். அந்த கிரைய ஆவண எண். 2676/2016 ஆகும். கிருஷ்ணவேணிக்கு மேற்படி சொத்து கிருஷ்ணவேணியின் தம்பி ஐய்யாசாமி தனக்கு உயில் எழுதி வைத்ததன் மூலம் கிடைத்ததாக கூறினார். நான் மேற்படி சொத்தை கிரையம் பெறும்போது கிருஷ்ணவேணிக்கு கொடுக்கப்பட்ட உயில், சிட்டா, பட்டா

ஆகிய ஆவணங்களை சரிபார்த்தபிறகு தான் கிரையம் பெற்றேன். கிரையம் பெற்ற அன்றே சொத்தின் அனுபவத்தை எனக்கு கொடுத்தார்கள்.

2. 21.12.2016 ம் தேதி மேற்படி சொத்திற்கு முறையாக அனுபவச்சான்று எனது பெயரில் பெற்றேன். அதன்பிறகு கிருஷ்ணவேணியின் உறவினரான காயத்ரி என்பவர் மேற்படி சொத்து உயில் படி தனக்கு சொந்தமானது என்று என்னிடம் தகராறுக்கு வந்தார். அந்த பிரச்சனை 2 ஆண்டு காலமாக நடந்து வந்தது. கிருஷ்ணவேணி அம்மாவிடம் இந்த பிரச்சனையை நீங்கள் தான் தீர்த்து வைக்க வேண்டும் என்று கூறினேன். அப்போது கிருஷ்ணவேணி அவர்கள் எதிரிகள் வசந்தி மற்றும் மணிமொழி ஆகியோர்களை அழைத்து பேசினார். அப்போது காயத்ரியுடன் சமாதானம் செய்து வைப்பதாக எதிரிகள் சொன்னார்கள்.

3. எதிரிகள் அவ்வாறு காயத்ரியுடன் சமாதானம் பேச செல்ல வேண்டும் என்றால் எங்களுக்கு ஒரு கிரிப் வேண்டும் என்றும், அதனால் சொத்தினை எதிரிகள் பெயரில் அடமான பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள். அதன்படி 30.07.2018 ல் எதிரிகள் பெயரில் அடமான பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்தேன். ஆனால் எதிரிகள் சொன்னபடி காம்பரமைஸ் செய்து வைக்கவில்லை. ரூ. 30 லட்சத்திற்கு 5 வருட காலத்திற்கு அடமானம் வைத்ததாக மேற்கண்ட ஆவணத்தை எழுதி கொடுத்தேன்.

**( வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).**

/ஒம்/– ஆர். அப்துல் சலாம்,
நீதித்துறை நடுவர்,
குன்னூர்,

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர்,
குன்னூர்